## பொள்ளாச்சி குற்றவாளிகளை காப்பாற்ற முயன்றவர் எடப்பாடி பழனிசாமி!

# குற்றவாளிகளை தண்டிக்கும் ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி!

## இராணிப்பேட்டை தொகுதி தேர்தல் பரப்புரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

இராணிப்பேட்டை, ஏப். 10 -

இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் ஆர். காந்தியை ஆதரித்து, இராணிப்பேட்டை இராஜேஸ்வரி திரையரங்கம் பகுதியில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தேர்தல் பரப்புரை மேற்கொண்டு, பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது:

உத்திரப்பிரதேசத்தில் ஒருவர் 100 ரூபாய் வரி கட்டினால் அவருக்கு 333 ரூபாய் கிடைக்கிறது. மத்தியப் பிரதேசத்திற்கு 279 ரூபாய் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் இருந்து 100 ரூபாய்க்கு வெறும் 29 ரூபாய் தான் ஒன்றிய அரசு தருகிறது.



**விவசாயிகளுக்கு எதிரான சட்டங்களை ஆதரித்தவர் எடப்பாடி!**

இவ்வாறு தமிழ்நாட்டிற்கு ஓரவஞ்சனையும் துரோகமும் செய்யக்கூடியவர்களுடன் தான் எடப்பாடி பழனிசாமி கூட்டணி அமைத்து, கைகோர்த்து மேடையில் நிற்கிறார். இஸ்லாமியர்களுக்கு எதிரான சிஏஏ சட்டம், விவசாயிகளுக்கு எதிரான சட்டங்கள், முத்தலாக் சட்டம், தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்கள் கொண்டு வரப்பட்டபோது, அவற்றை எடப்பாடி பழனிசாமி ஆதரித்தார்.

ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் போது, அண்ணாமலைக்கும் பழனிசாமிக்கும் ஒத்துப்போகவில்லை. அதனால் அவர்கள் பிரிந்து விட்டார்கள். அப்போது அவர் என்ன கூறினார்? 'இஸ்லாமிய சகோதரர்களிடம் சி.ஏ.ஏ.க்கு ஆதரவு தெரிவித்தது என் பெரிய தவறு. இனிமேல் அவர்களுடன் எந்தத் தொடர்பும் இருக்காது; உறவும் இருக்காது; கூட்டணியும் இல்லை' என்று கூறினார்.

இன்று மீண்டும் பா.ஜ.க.வோடு கைகோர்த்து மேடையில் நிற்கிறார். இதுவே எடப்பாடி பழனிசாமி அவர்களின் உண்மையான சுயரூபம். இன்று ஒன்றைச் சொல்வார்; அடுத்த நாள் அதை மாற்றிப் பேசுவார்; அதற்குப் பிறகு அதையும் மாற்றி வேறு ஒன்றைப் பேசுபவர் தான் எடப்பாடி பழனிசாமி.

**சிறுபான்மை மக்களுக்கு துரோகம் செய்தவர் எடப்பாடி!**

தமிழ்நாட்டுக்கும், சிறுபான்மை மக்களுக்கு துரோகம் செய்தவர்கள், ஒன்றிணைந்து ஒரு கூட்டணியாக நமக்கு எதிராக நிற்கிறார்கள். அதனால்தான் நம்முடைய முதலமைச்சர் சொல்கிறார், 'இது தமிழ்நாட்டுக்கும் என்.டி.ஏ.வுக்கும் இடையிலான தேர்தல்; தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் இடையிலான தேர்தல்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் 1 கோடி 31 லட்சம் சகோதரிகள் மகளிர் உரிமைத் தொகையைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மறுபடியும் நமது ஆட்சி வந்தவுடன், அந்தத் தொகை ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கும் மாணவர்களுக்கும் 'புதுமைப் பெண்' மற்றும் 'தமிழ்ப் புதல்வன்' திட்டங்களின் மூலம் மாதம் ரூ.1000 வழங்கப்படுகிறது. மறுபடியும் ஆட்சிக்கு வந்தவுடன், அந்தத் தொகை ரூ.1500 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

ஆட்சிக்கு வந்த பிறகு, 35 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும். காலை உணவுத் திட்டம் 8ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும். முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ரூ.5 லட்சம் காப்பீட்டுத் தொகை, ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் உத்தரப் பிரதேசத்தில் சுமார் 58%-59% ஆக உள்ளன. தேசிய சராசரி 65% ஆகும். தமிழ்நாட்டில் அது 23% மட்டுமே உள்ளது. அதையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்பதுதான் முதலமைச்சரின் எண்ணம்.

பொள்ளாச்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெற்றபோது, குற்றவாளிகளை காப்பாற்ற முயன்றவர் எடப்பாடி பழனிசாமி. ஆனால் தமிழ்நாட்டில் ஒரு குற்றம் நடந்தால், குற்றவாளிகளை தண்டிக்கும் ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி.

இந்த ராணிப்பேட்டை தொகுதியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிப் பணிகள். கலைஞர் உரிமைத் தொகை அது மட்டும் இங்கே 52,000 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ராணிப்பேட்டையிலே ரூ.11 கோடி மதிப்பீட்டில் வாரச்சந்தை வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. ரூ.10 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையப் பணிகள் நடைபெற்று வருகிறது. அறிஞர் அண்ணா மகளிர் கலைக் கல்லூரி மற்றும் அறிவியல் கல்லூரியில் வகுப்பறை கட்டடங்கள் இப்பொழுது கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**இராணிப்பேட்டை தொகுதியில் தி.மு.க. செய்த வளர்ச்சிப் பணிகள்:**

இந்தத் தொகுதியில் மட்டும் 52,813 மகளிர்க்கு மாதந்தோறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. இராணிப்பேட்டை மாவட்ட அளவில் மகளிர் விடியல் பயணத் திட்டம் மூலம் 7.88 கோடி முறை மகளிர் கட்டணமில்லாப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தொகுதியில், காலை உணவுத் திட்டத்தின் மூலம் 5,477 பள்ளி குழந்தைகள் நாள்தோறும் பயனடைகின்றனர். மாவட்ட அளவில் நான் முதல்வன் திட்டம் மூலம் 76,552க்கும் மேற்பட்ட மாணவர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிப் பெற்றுள்ளனர். இராணிப்பேட்டையில் ரூ.10 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையப் பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிஞர் அண்ணா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் 30 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

**இராணிப்பேட்டை தொகுதிக்கான தேர்தல் வாக்குறுதிகள்:**

பாலாற்றின் குறுக்கே அரப்பாக்கம், திருப்பாற்கடல் பகுதிகளில் புதிய உயர்மட்ட மேம்பாலங்கள் கட்டப்படும். நெல் விளையும் பகுதிகளில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நகரும் நெல் உலர்த்திகள் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

நெல் அதிகம் விளையும் பகுதிகளில் Silo Storage முறையில் தானிய சேமிப்புக் கிடங்குகள் உருவாக்கப்படும். சிப்காட் பகுதியில் தொழிலாளர்களின் நலன் காக்கத் தொழிலாளர் நல அரசு மருத்துவமனை அமைக்கப்படும். தொழிற்சாலைகள் அதிகமுள்ள இராணிப்பேட்டையில் பெண்கள் வேலைக்குச் செல்வதை எளிதாக்கும் பொருட்டு தொழிற்சாலைகளுடன் இணைந்து குழந்தைகள் காப்பகங்கள் உருவாக்கப்படும்.

இராணிப்பேட்டையைச் சார்ந்த நிஷாந்த் என்ற இளைஞர், இந்திய அளவில் யு.பி.எஸ்.சி. தேர்வில் 821வது இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். சாதாரண பின்னணியில் இருந்து, கல்வியே ஒரு கனவாக இருந்த நிஷாந்த், 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் படித்து அந்தத் தேர்வுகளை வெற்றிகரமாக முடித்து, தற்போது அதிகாரி பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். இதுதான் நான் முதல்வன் திட்டம் இதுதான் நம்முடைய ஆட்சியின் வெற்றி.

இடஒதுக்கீடு என்பது, கால் உடைந்த ஆட்டைத் தோளில் சுமந்து வருவது போன்றது என்று கலைஞர் அவர்கள் கூறுவார். அந்தத் தோளில் சுமந்து வந்த ஆட்டையே ஒலிம்பிக் ஓட்டப்பந்தயத்தில் ஓட வைத்தவர் நமது முதலமைச்சர்.

இத்தகைய பெருமையோடு உங்களிடம் வாக்கு கேட்கிறேன் மறுபடியும் திராவிட மாடல் ஆட்சி வரவேண்டும் . நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு அளிக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

---

### முதலமைச்சர் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையில்

# 2.0 'திராவிடமாடல்' ஆட்சி தொடரும்!

## திருவிடைமருதூரில் அமைச்சர் – முனைவர் கோவி.செழியன் வாக்கு சேகரிப்பு!

தஞ்சாவூர் ஏப்.10.

திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இஞ்சிக்கொல்லை, திருச்சேறை, செம்மங்குடி, வண்டுவாஞ்சேரி, மாத்தூர், திருலோகி, கீழசூரியமூலை, கூத்தனூர், மகாராஜபுரம், கதிராமங்கலம், முள்ளுக்குடி, செருகுடி, காவனூர் ஆகிய ஊராட்சிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர் அமைச்சர், முனைவர் கோவி.செழியன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பிரச்சாரத்தின் போது ஒன்றிய செயலாளர்கள் கூகூர் அம்பிகாபதி, சுந்தர.ஜெயபால், கோ.க.அண்ணாதுரை, மிசா மனோகரன், இர.உதயச்சந்திரன், எஸ். சரவணன், மற்றும் தோழமை கட்சிகளான காங்கிரஸ் தேமுதிக, விடுதலை சிறுத்தைகள் கட்சி, கம்யூனிஸ்ட், மதிமுக உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் உடன் சென்று வாக்கு சேகரித்தனர். அப்போது இஞ்சிக்கொல்லை ஊராட்சி பகுதியில் பொதுமக்களிடையே அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேசும்போது,

தமிழ்நாடு முதலமைச்சர் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை 234 தொகுதிகளிலும் ஒரு எழுச்சி ஏற்பட்டுள்ளது. 2011, 2016, 2021 என தொடர்ந்து திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி ஒரு வெற்றி தொகுதியாக திராவிட முன்னேற்ற கழகத்திற்கும் எளிய தொண்டன் கோவி.செழியனாகிய எனக்கும் உள்ளது.

ஒன்றரை ஆண்டு காலம் உயர்கல்வித்துறை அமைச்சராக பணியாற்றினேன். குறுகிய காலமாக இருந்தாலும் திருவிடைமருதூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நான் பொறுப்பேற்ற 30 நாட்களுக்குள் கல்லூரியை கொண்டு வந்து இந்த ஆண்டே தற்காலிக கட்டிடத்தில் மாணவர் சேர்க்கையை நடத்தி கல்லூரி நடைபெற்று வருகிறது. சொந்த கட்டிடம் கல்லூரிக்கு வேண்டும் என்று தமிழக முதல்வர் 18 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தந்துள்ளார். அதற்கும் பூமி பூஜை செய்யப்பட்டு திருவிடைமருதூர் கலை அறிவியல் கல்லூரிக்கான கட்டிட பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதி வேண்டும் என்று கோரிக்கையை கொண்டு சென்று அதையும் பெற்று திருவிடைமருதூரில் சமூக நீதி விடுதி திறக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாச்சியார்கோவில் போக்குவரத்து நெரிசல் காரணமாக அழகாபுத்தூரிலிருந்து மாத்தூர் வரை 7 கிலோ மீட்டர் புறவழிச் சாலை சுமார் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது. மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உதவித் தொகை கொடுத்துக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் 2000 ரூபாயாக கொடுப்பதற்கு உள்ளார். இதை ஒரு அப்பாவாக, அண்ணனாக தாயுள்ளத்தோடு தாய் வீட்டு சீதனமாக நம் தளபதி தமிழக முதல்வர் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

நடக்க இருக்கிற தேர்தல் தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளுக்கு இடையான தேர்தல் அல்ல. இது டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் நடக்கிற தேர்தல். தமிழகத்தின் வளர்ச்சியை பாதிக்க வைக்கிறது டெல்லி. மோடி அரசு தமிழக அரசுடன் துணையாக இருந்திருந்தால் தமிழகத்தின் வளர்ச்சி வேறு விதமாக இருந்திருக்கலாம். கல்வி திட்டத்திற்கு தரவேண்டிய நிதியில் முட்டுக்கட்டை 100 நாள் வேலை திட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியில் முட்டுக்கட்டை உணவுப் பொருள் வழங்குவதில் கட்டுப்பாடு மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கேஸ் இணைப்பு வழங்குவதில் ஏற்பட்ட முறைகேடு ஒன்றிய அரசின் தவறான கொள்கையால் எனவே ஒன்றிய அரசு தடுக்க நினைக்கிற அனைத்து உரிமைகளையும் தமிழ்நாடு பெற்றிட வேண்டுமென்றால் தமிழ்நாட்டை ஒரு தமிழன் ஆள வேண்டும்.

அனைத்து தமிழர்களின் தலைவர் மு.க.ஸ்டாலின் தான். அதற்கு தகுதியான வீரமிக்க தலைவராக இருக்கிறார். அவருக்கு பொதுமக்களாகிய நீங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். உதய சூரியன் சின்னத்திற்கு எனக்கு வாக்களிக்க வேண்டும் என தீவிர வாக்கு சேகரிப்பில் அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஈடுபட்டார்.



நாகை மாவட்டம் நாகை சட்டமன்ற தொகுதி நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா நாகையில் வாக்கு சேகரித்தார். உடன் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் மாரிமுத்து, நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து மற்றும் கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

---

# திருவாரூர் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு - உ.மதிவாணன் பங்கேற்பு!

திருவாரூர்,ஏப்.10-

திருவாரூர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் பூண்டி.கே.கலைவாணனை ஆதரித்து திருவாரூர் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

திருவாரூர் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம் திருவாரூர் மங்கல வரதர் திருமண அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக முதன்மை செயலாளர், அமைச்சர் கே.என். நேரு அவர்கள் தலைமை ஏற்றார். முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், வை. செல்வராஜ் எம்.பி. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் முன்னிலை ஏற்றனர்.

கூட்டத்தில் பூண்டி. கே.கலைவாணன் அவர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரை மேற்கொள்ளவும், தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான ஆட்சி மீண்டும் வர வேண்டிய அவசியத்தையும் அமைச்சர் கே.என்.நேரு மற்றும் முன்னாள் அமைச்சர் உ.மதி வாணன் ஆகியோர் செயல்வீரர்களிடம் எடுத்துரைத்தனர்.

வெற்றி வேட்பாளர் பூண்டி.கே.கலைவாணன் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்கவும், செயல்வீரர்கள் களப்பணியாற்றி வெற்றிவாய்ப்பை ஏற்படுத்தித் தரவும் வேண்டுகோள் வைத்து வாக்கு சேகரித்தார்.

செயல்வீரர்கள் கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், சேகர் கலிய பெருமாள், புலிவலம் ஏ. தேவா ,ஐ.வி. குமரேசன், பால.ஞானவேல், நகர செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பூண்டி. கே.கலைவேந்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி. செல்வம், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், கே.எஸ். எஸ்.தியாகபாரி, கலியபெருமாள், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் இரா.சங்கர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.



பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி வேட்பாளரும்,தர்மபுரி மேற்கு மாவட்ட செயலாளருமான முனைவர் பெ.பழனியப்பன் கொண்டகரஅள்ளி, வே.முத்தம்பட்டி ஊராட்சிகளில் விவசாயிகள் விடுத்த கோரிக்கைகளை கேட்டு, விவசாய விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், பாசன வசதிகளை மேம்படுத்தவும் தொடர்ந்து பாடுபடுவேன் என அவர்களுக்கு உறுதியளித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.உடன் அவைத்தலைவர் கே.மனோகரன்,ஒன்றிய செயலாளர் கே.பி.சக்திவேல்,கிழக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், மற்றும் கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர்.